செ. கு. எண்: 023 நாள்: 26.02.2017

# <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 26.2.2017</u>

இன்று (26.2.2017), தூத்துக்குடி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சேர்ந்த 38 நபர்கள், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், மணப்பாடு கடல் பகுதியில் தனியாருக்கு சொந்தமான படகு ஒன்றில் சவாரி சென்றபோது, கடலில் உயரமான அலை எழுந்ததால் படகு கவிழ்ந்ததில், படகில் பயணம் செய்த 9 நபர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் ஆழ்ந்த வருத்தமும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன்.

இப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவம் குறித்து எனக்குத் தகவல் கிடைத்தவுடன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு கடம்பூர் எஸ். ராஜூ அவர்களை உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபடவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும் நான் அனுப்பி வைத்துள்ளேன்.

இந்த விபத்தில் 11 நபர்கள் காயமடைந்து தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அனைவருக்கும் உயர் சிகிச்சை அளிக்க மருத்துவத்துறை அதிகாரிகளுக்கும், இத்துயரச் சம்பவத்தில் உடனடியாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டு, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட நிருவாகத்திற்கும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இப்படகு விபத்தில் உயிரிழந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாயை அவர்களது குடும்பத்தாருக்கும், காயமடைந்தவர்களுக்கு தலா 50,000 ரூபாயை, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**